**செய்தி வெளியீடு எண் :1112** **நாள்: 05.07.2022**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 30.06.2022 அன்று இராணிப்பேட்டை மாவட்ட அரசு விழாவிற்கு செல்லும் வழியில் காரைக்கூட்ரோட்டில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் உள்ள சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் சிறுவர்களுக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின் போது இல்லத்தில் பணியாற்றும் பணியாளர்களின் விவரங்கள் குறித்து கேட்டறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அப்போது பணியில் இல்லாத ஆசிரியர்கள் மற்றும் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, அன்றைய தினமே மேற்காண் இல்லத்தின் கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ஆகிய இருவருக்கும் விளக்கம் கேட்டு குற்றக்குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையைத் தொடர்ந்து மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி. கீதா ஜீவன் அவர்கள் மறு தினமே (01.07.2022) இராணிப்பேட்டை சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

இவ்வில்லத்தில் அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை, வகுப்பு வாரியாக உள்ள மாணவர்களின் எண்ணிக்கை விவரம், பணியாளர்கள் வருகைப் பதிவேடு, பணியாளர்கள் விவரம், காலிப் பணியிடங்கள் விவரம் மற்றும் இதர பணியில் உள்ள பணியாளர்களின் விவரங்கள் ஆகியவற்றை விசாரித்தார். இல்லத்தில் உள்ள சமையலறைக்கு சென்று மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தை உண்டு பார்த்து, மாணவர்களுக்கு வழங்கப்படும் தினசரி உணவு அட்டவணையை சோதனை செய்தார்.

மாணவர்களிடம் அவர்கள் விரும்பும் காலை உணவு மற்றும் மதிய உணவு மற்றும் இரவு உணவு குறித்து கேட்டறிந்தார். வாரம் ஐந்து நாட்களும் மாணவர்களுக்கு மதிய உணவோடு முட்டை வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு அனைத்து மாணவர்களிடமும் சந்தித்து கருத்துக்களை கேட்டார்.

இவ்வில்லம் அமைந்துள்ள வளாகத்தினுள் செயல்பட்டு வரும் இராணிப்பேட்டை மாவட்டத்திற்கான மாவட்ட குழந்தைகள் நலக்குழு மற்றும் அரசினர் வரவேற்பு இல்லம் ஆகியவற்றையும் அமைச்சர் பார்வையிட்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி சமூகப் பாதுகாப்புத்துறையின் கீழ் இயங்கும் குழந்தைகள் இல்லங்கள் / கூர்நோக்கு இல்லங்கள் / சிறப்பு இல்லங்கள் / பாதுகாப்பு இல்லங்கள் / பிற்காப்பு நிறுவனங்கள் ஆகிய இல்லங்களில் உறைவிடம் பெற்றுள்ள குழந்தைகளின் கல்வி, உணவு, உடை, சீருடை, தங்கும் அறை, கழிவறை, குளியலறை மற்றும் விளையாட்டு மைதானம் ஆகியவற்றை இயக்குநரத்தில் உள்ள அலுவலர்கள் உடனே ஆய்வு செய்து, அதன் அறிக்கையை இயக்குநருக்கு 06.07.2022க்குள் சமர்ப்பிக்க ஆணையிட்டார். மேலும், மேற்குறிப்பிட்ட இல்லங்களில் தங்கியுள்ள மாணவர்கள் மற்றும் சிறுவர்கள் அனைவருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி கட்டில், பெட்ஷீட் வழங்கிடவும் உரிய கருத்துருக்களை சமர்ப்பிக்க மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு சமர்ப்பிக்கும் அறிக்கையின் அடிப்படையில் சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் அனைத்து இல்லங்களிலும் ஆசிரியர்கள் நியமனம், ஆசிரியரல்லாத பணியாளர்கள் நியமனம், பிற பணியாளர்கள் மற்றும் மாணவர்களின் தேவைகள், தற்போதைய காலக்கட்டத்திற்கு ஏற்றவாறு மாணவர்கள் மற்றும் சிறுவர்களின் எதிர்கால நலனுக்காக செய்யப்பட வேண்டிய மாற்றங்கள், குறிப்பாக மாணவர்களுக்கு /

சிறுவர்களுக்கு முறையான கல்வி, திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல் மற்றும் அவர்களுக்கு ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஆற்றுப்படுத்துதல் (Counselling) அளித்தல் ஆகியவை குறித்து ஒரு விரிவான அறிக்கை தயார் செய்யப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனை மற்றும் அனுமதியை பெற்று மறு சீரமைப்புகள் முழு அளவில் செய்யப்படும் என்றும் மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன் அவர்கள் தெரிவித்தார்.

மேற்கண்ட ஆய்வின் போது மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி அவர்களும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஷம்பு கல்லோலிக்கர், இ.ஆ.ப., மற்றும் இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பாஸ்கர பாண்டியன், இ.ஆ.ப., ஆகியோரும் உடனிருந்தனர்.

.............

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in